திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசியில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்தான் இருக்கிறது. அந்தப் பால் உற்பத்தியளார் கூட்டுறவுச் சங்கத்திற்கு நாள்தோறும் எவ்வளவு பால் வெளியிலிருந்து அனுப்பப்படுகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி நகரத்திற்கு, சிவகாசி கூட்டுறவுப்பால் உற்பத்தியாளர் சங்கம் பால் விநியோகம் செய்து வருகிறது. நாளொன்றுக்கு அங்கு 8 ஆயிரம் லிட்டர் பால் தேவைப்படுகிறது. அதிலே 4 ஆயிரம் லிட்டர் பாலை சிவகாசி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் விற்பனை செய்கிறது. மீதமுள்ளதை தனியார்கள் விற்பனை செய்து கொண்டு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடைக் காலங்களிலே அங்கேயுள்ள கன்ஸ்யூமர்களுக்கு பால் கொடுக்க முடியவில்லை. தட்டுப்பாடு ஏற்படுகின்ற ஒரு சூழ்நிலையிலே இங்கே கொடுக்கப்படுகின்ற 8 ஆயிரம் லிட்டர் பாலையும் அங்குள்ள பால் உற்பத்தியாளர் ஒன்றிய சங்கங்களின் மூலமாக வெளியிலே இருந்து தருவிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவன செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 15 டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

15—

இலவசத் தையல் இயந்திரம் பெறும் பெண்களின் வயதுவரம்பு.

* 22320—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமூகநலத் துறை மூலம் இலவசத் தையல் இயந்திரம் பெறும் பெண்களுக்கு அதைப்பெற வயது வரம்பு ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதனைக் குறைக்கும் பரிசீலனை உள்ளதா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தக் கேள்விக்கு இடமில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சமூகத்தில் விதவைப் பெண்களாக, கணவரால் கைவிடப்பட்ட கைம்பெண்களாக இருக்கிற பெண்களுக்காவது இலவச தையல் இயந்திரங்களை அளிப்பதில் முன்னுரிமை அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தையல் இயந்திரம் பெறும் பெண்களுக்கு வயது வரம்பு ஏதேனும் உண்டா என்றுதான் கேட்டிருந்தார்கள். அதைத்தான் இல்லையென்று சொன்னேன். 20 வயதிலிருந்து 40 வயதுவரை யார் சமூகத்தில் நலிவடைந்த பெண்களாக இருந்தாலும் உடல் ஊனமுற்றவர்களாக இருந்தாலும் விதவைகளாக இருந்தாலும் அவர்களுக்கு வழங்கிக் கொண்டு இருக்கிறோம். இதில் எந்தவித மாற்றமும் இல்லை. உடல் ஊனமுற்றவர்களுக்கு இன்னும் வயது வரம்பு தளர்த்தப்பட்டும் அளிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 வயதிலேயிருந்து 40 வயதுக்குட்பட்டவர்களுக்கு அளிப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் 40 வயதுக்கு மேற்பட்டும் பல ஏழைப் பெண்கள் வாழ்வதற்கு வழியில்லாத சூழ் நிலையில் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட பெண்களுக்கு வசதியற்ற அந்தப் பெண்களுக்கு இலவசமாக தையல் இயந்திரங்களை வழங்க இயலாவிட்டாலும் எளிய தவணை முறையிலே வட்டியற்ற கடனாக தையல் இயந்திரங்களை வழங்குவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகத்தில் நலிவடைந்த பெண்களுக்கு சுயதொழில் செய்வதற்கு எல்லாவிதத்திலும் சமூக நலத்துறை உதவி செய்து வருகிறது. தையல் இயந்திரங்

களுக்கு லோன் தருவதில்லை. இலவசமாகத்தான் வழங்கப்பட்டு வருகிறது. நலிவுற்ற பெண்கள், விதவைப் பெண்கள் என்கின்ற அடிப்படையில் 40 வயதுக்கு உட்பட்டவர்களுக்குத்தான் இதுவரையில் சமூக நலத்துறையில் அப்ளை செய்து வாங்கி இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 16, டாக்டர் அ. ஸ்ரீதரன் மாண்புமிகு வனத்துறை அமைச்சர்.

16—

கோவை வனக்கல்லூரியை வால்பாறைக்கு மாற்றும் திட்டம்.

*20056—டாக்டர் அ. ஸ்ரீதரன் :

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் : கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை வனக்கல்லூரியை வால்பாறைக்கு மாற்றுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோவை தென்னிந்திய வனச்சரகர் கல்லூரியை வால்பாறைக்கு மாற்றுவதற்கு செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலை மதிக்க முடியாத வைரத்தை பித்தளையில் பதித்து அழகு பார்ப்பதைவிட, தங்கத்தில் பதித்து அழகு பார்த்தால்தான் தங்கத்துக்கும் மதிப்பு அந்த வைரத்திற்கும் மதிப்பு. அதைப்போல கோவை மாநகரத்தினுடைய மத்தியில் இருக்கக்கூடிய வனக் கல்லூரியை வால்பாறை மலைப்பகுதியும் வனமும் நிறைந்த பகுதிக்கு மாற்றினால்தான் வால்பாறையினுடைய வனத்திற்கும் வனப்பு; வனக் கல்லூரிக்கும் வனப்பு. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணம் சிறப்பானது. ஆனால் இந்தக் கல்லூரியை சுமார் 75 ஆண்டுக்காலம் 1987 வரை மத்திய அரசு நடத்தி வந்தது. அதற்குப்பிறகு மத்திய அரசு ஒரு கொள்கை முடிவு எடுத்து இதை மாநில அரசே நடத்தவேண்டுமென்று சொன்னார்கள். மீண்டும்